சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.37/2020

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. மணி த/பெ. முத்துகிருஷ்ணன் | நாள்.25.02.2025 |
| வயது. 57 | வட்டம் |
| கிராமம். திருவளச்சேரி | மாவட்டம். |

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 26.5.1969 தேதியில் 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய ஆவண அசல் வா.த.சா.ஆ.1. 26.5.1969 தேதியில் 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவு நகல் வா.த.சா.ஆ.2. மு.வ. 164/1975 வழக்கின் வழக்குரை மற்றும் தீர்ப்புரை நகல் வா.த.சா.ஆ.3. 31.5.1999 தேதியில் நான் என் தந்தை மற்றும் சகோதரர் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சார் பதிவு நகல் வா.த.சா.ஆ.4. 19.10.2015 தேதியில் 2ம் பிரதிவாதி பெயில் 1ம் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் இணை வழி நகல் வா.த.சா.ஆ. 5. 2.7.2020 தேதியில் 3ம் பிரதிாவதிக்கு 2ம் பிரதிவாதி எழுதி வைத்த கிரய ஆவணத்தின் சார்பதிவு நகல் வா.த.சா.ஆ.6. வழக்குச் சொத்திற்கான கணினி பட்டா நகல் வா.த.சா.ஆ.7. மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் நான் அளித்த புகாரின் பேரில் வழங்கப்பட்ட புகார் மனு ஏற்பு சான்றிதழ் வா.த.சா.ஆ.8. 1.6.2003 முதல் 24.7.2020 வரையுள்ள வில்லங்க சான்றிதழ் நகல் வா.த.சா.ஆ.9.

வழக்குச் சொத்தை காண்பிக்கக்கூடிய புகைப்படம் மற்றும் குறுந்தகடு வா.த.சா.ஆ.10. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதிகள் தரப்பில் ஆஜர் இல்லை, நீதியின் பால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)